**எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - ரீபீ சுற்று 9 கூறின் (ரீஎவ்எம்) - 2014**

எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - ரீபீ சுற்று 9 கூறின் (ரீஎவ்எம்) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் (ஜீஎப்ஏரீஎம்) இடையே 2013 யூன் 19 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட எஸ்ஆர்எல்--607-ஜீ07--ரீ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் சீ(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதார அமைச்சும் தற்போதைய சுகாதார மற்றும் சுதேசிய வைத்திய அமைச்சு செயற்திட்ட நோக்கெல்லை, நடவடிக்கைகள், பாதீடுகள், மைல்கற்கள் மற்றும் குறிகாட்டிகள் உள்ளடங்கலான செயற்திட்டத்தின் நிறைவேற்றலிற்கும் அமுலாக்கலிற்கும் பொறுப்பாக உள்ளது. அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையுடன் சேவையாற்றிய பகுதிகளுடன் மேம்படுத்தல் மற்றும் அணுகும் முறைமை நடவடிக்கைகளை அதிகரிக்கின்றவற்றின் ஊடாக நேரடியாக அவதானிக்கப்பட்ட சிகிச்சை குறுகிய கால பாடநெறியின் (டிஓரிஎஸ்) வினைத்திறனை உயர்த்துவதன் மூலம் இலங்கையில் காச நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் சுற்று 6 மற்றும் 9 இற்கான காச நோய் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கு ஐ.அ.டொலர் 9,044,169 ஆனதுடன் முழுத் தொகையும் உலகளாவிய நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2008 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டுத் நியமங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏனைய பதிவேடுகள் கொண்டுள்ள தகவல்களுடன் உடன்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 கணக்காய்வு அவதானிப்புகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,539,444 தொகையான செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மீதான மிகைகட்டணங்கள் நிதிக் கூற்றுக்களில் கணக்கிடப்பட்டோ அல்லது வெளிப்படுத்தப்பட்டோ இருக்கவில்லை.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1980 இன் 27 ஆம் இலக்க அழகுசாதன மற்றும் மருந்துகள் அதிகாரச்சட்டத்தின் 43(ஆ) ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், மருந்து இருப்புக்கள் மருந்துகளின் தரத்தை பாதுகாப்பதற்கு பேணப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், பிராந்திய மருந்தகங்களிலுள்ள இருப்புக்கள் இதன்படி பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக ரூபா 148,105,202 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் பௌதீக மெய்மையாய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள்- 2006 இன் 5.4.8(அ) மற்றும் (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 1,771,280 கூட்டு மொத்தத் தொகையான உபகரணங்களின் கொள்வனவிற்காக மதிப்பிடப்பட்ட தொகையின் 10 சதவீதத்தை விடக் குறையாத முறையான செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1.2 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு, செயற்திட்டத்தின் பதவியணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் போது ரூபா 4,070,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 10 எல்ஈடி நுண்ணோக்கிகள் சம்பந்தப்பட்ட உற்பத்தி அதிகாரக் கடிதம், குறிப்புரைச் சான்றிதழ் கடிதம், தாய்நாட்டுச் சான்றிதழ், உதிரிப்பாகங்கள் கிடைப்பனவுக் கடிதம் போன்ற தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 பயன்பாற்ற சொத்துக்கள்

2014 யூலை 18 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,070,000 பெறுமதியான பத்து எல்ஈடி நுண்ணோக்கிகள் தேசிய காச நோய் குறிப்புரை ஆய்வு கூடத்தில் 2015 மார்ச் 27 வரை பயன்பாடற்று இருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2014 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள் | | 2014 ஆண்டின் போது பயன்படுத்திய தொகை | | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் |
| ஜீஎவ்ஏரீஎம் | 9.04 | 1,083.02 | 0.69 | 90.0 | 0.52 | 67.77 | 8.14 | 945.5 |
| | 9.04 | 1,083.02 | 0.69 | 90.0 | 0.52 | 67.77 | 8.14 | 945.5 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியால் ரூபா 90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.69 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் செயற்திட்டத்தால் ரூபா 67.77 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.52 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டத்தின் விரிவான பாதீட்டின் பிரகாரம், 2008 முதல் 2014 வரையான காலத்தின் போது உலகளாவிய நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட ஐ.அ.டொலர் 9.04 மில்லியன் விடுவிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் அதில் ஐ.அ.டொலர் 8.41 மில்லியன் செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 945.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8.14 மில்லியன் பயன்படுத்தியிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் 30 நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட ரூபா 41,808,125 கூட்டு மொத்தத் தொகையான மொத்த ஒதுக்கீடுகள் முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் வேறு 10 நடவடிக்கைகளிற்காக ரூபா 10,118,500 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மொத்த ஒதுக்கீட்டில் 24 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 2,379,650 தொகை மாத்திரம் 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) பெறப்பட்ட மானியத்தின் மொத்தப் பெறுகையில், ஐ.அ.டொலர் 133,908 இற்கு சமமான ரூபா 17,548,705 தொகை குறித்த நோக்கத்திற்காக அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தாமல் மீளாய்வாண்டு இறுதியில் பொதுத் திறைசேரிக்கு திருப்பப்பட்டிருந்தது.

**3.2. பௌதீக செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 5,955 உத்தியோகத்தர்களின் பயிற்சிக்காக 164 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 137 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மாத்திரம் 3,864 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்

(ஆ) செயற்திட்டத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட வருடாந்த மீளாய்வு கூட்டத்திற்காக பங்குபற்றுவதற்கு 120 நபர்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 50 நபர்கள் மாத்திரம் வருகைதந்திருந்தனர்.

(இ) 2014 யூலை 18 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,070,000 பெறுமதியான பத்து எல்ஈடி நுண்ணோக்கிகள் தேசிய காச நோய் குறிப்பு ஆய்வுகூடத்தின் வளவில் 2015 மார்ச் 27 வரை பயன்ற்று இருந்தது.